நாமக்கல் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
மூ.மு.எண்.5525/ஆ4/2022 நாள். 10 .06.2022

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப்பணி – பள்ளிக் கல்வித்துறை – இளநிலை உதவியாளர் நேரடி நியமனம் – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழு தொகுதி IV தேர்வு – 2018–19, 2019–20 – தேர்வாணையம் மூலம் தேர்வு – பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – சார்பு.

பார்வை: 1. சென்னை–3, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக்குழு செயலாளரின் கடிதம் எண்.2563/PSD-I2/2020 நாள்.21.07.2020
2. நாமக்கல் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.6685/ஆ4/2020 நாள்.17.09.2020.
3. அரசாணை எண். 101 பள்ளிக் கல்வி (வரவு செலவு ) துறை நாள் 18.05.2018.
4. திருச்செங்கோடு மாவட்டக் கல்வி அலுவலரின் கடித ந.க.எண்.1179/அ1/2022 நாள்.02.06.2022.

------

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் பார்வை(1)ன் படி இளநிலை உதவியாளர் பணிக்கு தேர்வு செய்யப்பட்டு, பள்ளிக் கல்வித் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை(2)–ல் காணும் செயல்முறைகளின்படி நாமக்கல் மாவட்டத்தில் நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ் இளநிலை உதவியாளராக பணியாற்றி வரும் கீழ்க்காணும் பணியாளருக்கு கலம் 4ல் குறிப்பிட்ட நாள் முதல் சென்னை உயர்நீதிமன்றத்தில் (சென்னை / மதுரை கிளை) நிலுவையிலுள்ள வழக்குகளில் வழங்கப்படும் முடிவான தீர்ப்புக்கு கட்டுப்படல் வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

அன்னார் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் மூன்று ஆண்டுகால தொடர் பணியில் இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தினை நிறைவு செய்திடல் வேண்டும். தகுதிகாண்பருவ காலத்திற்குள் தமிழ்நாடு அலுவலக நடைமுறை நூல் தேர்வு மற்றும் பவானிசாகர் அடிப்படை பயிற்சியில் தேர்ச்சி பெற்ற பின்னரே தகுதிகாண்பருவம் முடித்தமைக்கான ஆணை வழங்கப்படும் எனவும் ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | பணியாளர் பெயர், பதவி மற்றும் பணிபுரியும் அலுவலகம் திரு/திருமதி/செல்வி | இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 01 | திரு.மு.தினேஷ்குமார், இளநிலை உதவியாளர், அரசு உயர்நிலைப் பள்ளி, நெ.3 கொமாரபாளையம், நாமக்கல் மாவட்டம். | 25.09.2020 முற்பகல் | 25.09.2020 முற்பகல் |

அன்னார் பணிவரன்முறை செய்யப்பட்ட விபரத்தினை உடன் சம்பந்தப்பட்ட பணியாளரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பெறப்பட்ட அன்னாரின் அசல் பணிப்பதிவேடு மற்றும் அசல் சான்றிதழ்கள் இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது. பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதலினை அனுப்பி வைக்குமாறு சார்ந்த தலைமையாசிரியருக்கு தெரிவிக்கப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்,
நாமக்கல்.

இணைப்பு – அசல் பணிப்பதிவேடு மற்றும் அசல் கல்விச் சான்றுகள்

பெறுதல் : சம்மந்தப்பட்ட பணியாளர் ( உரியவழியாக)
நகல் : தலைமையாசிரியர், அரசு உயர்நிலைப் பள்ளி, நெ.3 கொமாரபாளையம்.
நகல் : மாவட்டக் கல்வி அலுவலர், திருச்செங்கோடு.